BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

An international open access, peer- reviewed, refereed journal

# கொங்குநாட்டுக் கல்வெட்டுகளில் சபையார் சார் பதிவுகள்

# Archives Related to the Sabha Members in the Inscriptions of Kongu Nadu

**முனைவர் ந.மகாதேவி**

தமிழ், உதவிப்பேராசியர், விஇடி கலை மற்றும் அறிவியல் (இருபாலர்) கல்லூரி, திண்டல், ஈரோடு, தமிழ்நாடு, இந்தியா

**Dr.N.Mahadevi**

Assistant Professor in Tamil, VET Institute of Arts and Science (Co-education) college, Thindal, Erode- 638 012.

Tamilnadu, India, Cell: 7502131597, Email: mahadevin@vetiasac.in

## Abstract

Records about the Sabaiyars (Assembly members) are found in the Inscriptions of Kongu Nadu. This study examines the authority, responsibilities, and donations associated with these Sabaiyars during that period. From these inscriptions, it is understood that kings, the Sabaiyars connected with them, and other individuals did not consider their duty complete merely by constructing temples. Instead, with the noble intention that the temples should continue to flourish and function well, they provided various donations and endowments to ensure the proper maintenance and prosperity of these temples.

**Key Words:** Vencham (fried side dish / poriyal), Thirupputhiyathu (Sacred food offering / Ritual offering to the deity), Sungam (tax)

**ஆய்வுச் சுருக்கம்**

கொங்குநாட்டுக் கல்வெட்டுகளில் சபையார்கள் பற்றிய பதிவுகள் காணப்படுகின்றன. இச்சபையார்கள், அக்காலகட்டத்தில் பெற்றிருந்த அதிகாரம், பொறுப்பு, வழங்கியகொடை ஆகியவற்றைப் பற்றி ஆய்வதாக அமைகின்றன. அரசர்களும் அதனைச் சார்ந்த சபையார்களும் மற்றவர்களும் கோயில்களை அமைப்பதோடு தன் கடமை முடிந்துவிட்டது என்று எண்ணாமல், தொடர்ந்து அக்கோயில்கள் சிறப்புடன் இருக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு பல கொடைகள் அளித்ததை அறியமுடிகின்றது.

**திறவுச்சொற்கள்:** வெஞ்சம் (பொறியல்), திருப்புதியது (படையல்), சுங்கம் (வரி)

## முன்னுரை

கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், சேலம், கரூர், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி போன்ற மாவட்டங்களை உள்ளடக்கியதாகக் கருதப்படும் கொங்குநாட்டுக் கல்வெட்டுகளில் சபையார்கள் பற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## ஆய்வு எல்லை

கொங்குநாட்டில் கிடைக்கக்கூடிய கி.பி.10 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.15 ஆம் நூற்றாண்டு வரை கிடைக்கப்பெற்ற கல்வெட்டுகளே ஆய்வு எல்லையாக அமைகின்றன.

## சபையார்கள்

சபை என்பது ஒரு கூட்டம் அல்லது பேரவை எனப் பொருள் தருகிறது. கிராமத்தில் முக்கியமான நிர்வாக முடிவுகளை எடுக்க உருவாக்கப்பட்ட கூட்டமே சபை. அந்தச் சபையில் உறுப்பினர்களாக இருந்தவர்களைச் **'சபையார்'** என்று கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இது 'சபா' என்ற வடமொழிச் சொல்லின் தழுவல். சபை என்பதற்கு அவை, மன்றம் எனப் பல வகைகளில் பொருள்கொள்ளலாம்.

**பூந்துறைநாட்டு சபையார்**

உம்மாத்தூர் அரசர்களான நஞ்சராய உடையாரின் ஆட்சியில் கி.பி.பதினாறாம் நூற்றாண்டில் பூந்துறை நாட்டுச் சபையார் நசியனூரில் ஒன்றுகூடி மூவேந்தீசுவரர் கோவிலில் மகாமண்டபம் கட்டுவதற்காகவும் மற்றும் திருவிளக்கு, திருப்பரிவட்டம் போன்றவற்றைச் செய்வதற்காகவும் நிலக்கொடை அளித்துள்ளனர். இதனை,

*"மேல்கரைப் பூந்துறை நாட்டோம்*
*எங்கள் நாட்டு நசையனூரில் நிறைவற*
*நிறைந்து குறை*
*வறக்கூடி வாட்டம் இன்றிக் கூட்டம் பெருக*
*மணி மண்டபத்திலிருந்து*
*மண்டபம் மகாமண்டபம்"*[1]

என்று கல்வெட்டு வரிகள் உணர்த்துகின்றன.

**குலோத்துங்கச்சோழச் சதுர்வேதிமங்கலத்துச் சபையார்**

கி.பி.14 ஆம் நூற்றாண்டில் சோழமண்டலத்து வடகரை இராசராச வளநாட்டுப் பஞ்சவன் மாதேவியான, குலோத்துங்கச்சோழ சதுர்வேதி மங்கலத்துச் சபையார் கடத்தூரிலுள்ள மருதீசர் கோவிலில் தண்ணீர்ப் பந்தல் அமைப்பதற்காக நிலம் கொடையளித்துள்ளார். இதனை,

*"இராசராச வளநாட்டு பஞ்சவன் மாதே(வி)யான*
*குலோத்துங்க சோழசதுர்வேதி மங்கலத்து"*[2]

என்ற கல்வெட்டுச் சான்று சுட்டுகின்றது.

**விக்கிரமச் சோழபுரத்துச் சபையார்**

வீரபாண்டியனின் இருபத்து நான்காவது ஆட்சியாண்டான கி.பி.1289 இல் வீரசோழவளநாட்டு முகுந்தனூரான விக்கிரமசோழச் சதுர்வேதிமங்கலத்துச் சபையார் குறுப்புநாட்டிலுள்ள குன்னத்தூர் கோவிலில் இலட்சுமி நாராணயப் பெருமாளுக்கு ஆண்டுதோறும் ஶ்ரீஜெயந்தி (விழா), அந்நாளுக்கு செய்யப்படும் அமுதுபடி, வெஞ்சனம் (பொறியல்) ஆகியவற்றிக்கு ஒவ்வொரு ஆண்டும் எட்டுக்கல் நெல் கொடுப்பதாக ஒப்புக்கொண்டுள்ளனார். இதனை,

*"இந்நாள் முதலாண்டுதோறும் வந்த ஆள்வசம்*
*எண்கல னெல்லு*
*(அளப்) போமாகவும் இப்படி இத்தன்மம்"*[3]

என்ற சான்றுகளின் வழி அறிய முடிகின்றது. குன்னத்தூர் கோயிலுக்கும், முகுந்தனூருக்கும் இடையேயுள்ள உறவுமுறை மற்றும் எட்டுக்கலம் நெல் கொடுக்க ஒப்புக்கொண்ட செய்தி போன்ற காரணங்கள் ஆய்வுக்குரியவை. அவை பற்றிய விரிவான செய்திகள் இக்கல்வெட்டுகளில் அறியமுடியவில்லை.

**மதுராந்தகச் சதுர்வேதிமங்கலத்துச் சபையார்**

மூன்றாம் வீரசோழனின் இருபத்துமூன்றாவது ஆட்சியாண்டான கி.பி.1191 இல் வீரசோழவளநாட்டு மாநம்பாடியான மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார் அன்னூரிலுள்ள மன்னீசரின் திருப்புதியதுக்கும் (படையல் உணவு, திருக் கார்த்திகைக்கும் வரிக்கணக்கில் ஓர் ஆண்டுக்கு ஐந்துக்கலம் நெல் கோவில் வரியாகக் கொடுக்க ஒப்புக் கொண்டார். இதனை,

*"இறை காணத்தால்*
*ஆட்டும் ஐங்கல நெல்லுக்கு தேவரிறை*
*யோடாக்கும் வரியிட்டுக்*
*கொடுப்போமாகவும்"*[4]

என்ற சான்றுகளின்வழி உணரமுடிகின்றன.

**விக்கிரமச் சோழபுரத்துச் சபையார் கடன்பெறுதல்**

சுந்தரபாண்டியனின் இருபத்தேழாவது ஆட்சியாண்டான கி.பி.1312 இல் வீரசோழவளநாட்டு முகுந்தனூரான விக்கிரமசோழ சதுர்வேதிமங்கலத்துச் சபையார் தங்களூர் அணைக்கு கல்லிட்டுப் பழுதுபார்க்க, குன்னத்தூர் இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயிலில் பண்டாரத்திலிருந்து 200 பணம் கடனாகப் பெற்றார். இப்பணத்திற்கு வட்டியாக 13 கலம் நெல்லும் 26 பணமும் வட்டியாகத் தந்தனர். இவ்வட்டித் தொகையை இரண்டு தவணை முறையாக ஒரே ஆண்டில் செலுத்தினர். இதன் மூலமாக இலட்சுமி நாராணயனப் பெருமாளுக்கு திருநட்சத்திரமானத் திருவாதிரையில் திருவிழா எடுக்கவும், பதினாறு வைணவர்களுக்கு உணவிடவும் செய்துள்ளதை,

*"இந்நெல்லும் பணமும் குடுக்குமிடத்து அற்பசி*
*மாஸத்திலே ஒன்...திலே ஒன்று பாதியுமாக*
*விளையிலும்*
*விளையாதொழியிலும் ஊரிற்கேடு*
*போனாலுமளப்போ*
*மாகாவும்"*[5]

என்ற கல்வெட்டுச் சான்றுகளின்வழி அறிய முடிகின்றது. மேலும், இவர்கள் பயிர் விளைந்தாலும், விளையாவிட்டாலும் ஊர் அழிந்தாலும், அழியாவிட்டாலும் சந்திரனும் சூரியனும் உள்ளவரை கொடுக்க வேண்டிய வட்டித் தொகையைச் செலுத்த வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. விக்கிரமச்சோழச் சதுர்வேதிச் சபையார், பண்டாரத்தில் வாங்கிய கடனைத் திருப்பி எப்பொழுது அளித்தார்கள் என்பது பற்றிய குறிப்புகள் கல்வெட்டுகளில் சுட்டிக்காட்டவில்லை.

முகுந்தனூரானது, விக்கிரமச்சோழச் சதுர்வேதிமங்கலம் என்று விக்கிரமச்சோழனின் காலத்தில் பெயர் மாற்றப்பட்டுள்ளதை, இக்கல் வெட்டின்வழி அறியலாம். மேலும், வைணவர்களுக்கு உணவளிப்பதை புனிதமாகக் கருதும் வழக்கம் இருந்துள்ளதை அறியமுடிகிறது. வாங்கிய கடனின் வட்டியை ஊரே அழிந்தாலும் கொடுக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டுவதால் வரிவசூல் செய்வதில் கடுமையாக இருந்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

**வீரசோழச் சதுர்வேதிமங்கலத்துச் சபையார்**

வீரபாண்டியனின் பதினைந்தாவது ஆட்சியாண்டான கி.பி.1280 இல் குறுப்பநாட்டு விசையமங்கலத்துத் திருமேற்கோயில் நாயனார், சித்திரமேழி விகண்ணகரநாயனார், கருமாணிக்காழ்வார் கோயிலிலுள்ள நம்பிமார்க்கும், ஸ்ரீ வைஸ்ணவர்க்கும் ஸ்ரீ வீரசோழச் சதுர்வேதிமங்கலத்துச் சபையார் விளக்கு எரிப்பதற்காகப் பண்டாரத்தில் இருபத்துமூன்று பணம் கொடையளித்துள்ளார். அப்பணத்தில் அவற்றில் திருநந்தாவிளக்கு எரிப்பதற்கு எண்ணெய் அளிக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார்ார். இதனை,

*"ஒடுங்கின பணமாய்க் கைக்கொண்ட பணம் 23 நா*
*ங்கள் கைக்கொண்டு இஞ்ஞாயிறு முதல் மாதம்*
*ஒன்றுக்கு குறுப்பு நாழியால்*
*முன்னாழி மூவுழக்கே இரண்டரை செவிடு*
*எள்ளெண்ணெய்யாக ஆழி*
*மூவுழக்கு எண்ணெய் தண்டுந்துணையும்*
*சோதிடுவோமாகவும்"*[6]

என்ற சான்றுகள் புலப்படுத்துகின்றன.

**சிவபாதசேகர சதுர்வேதிமங்கலத்து சபையார்**

இரண்டாம் விக்கிரமச்சோழனின் மூன்றாவது ஆட்சியாண்டான கி.பி.1259 இல் சிவபாதசேகர சதுர்வேதிமங்கலத்து சபையார் பேரூரிலுள்ள இடக்கை நாயகீஸ்வரமுடையாருக்கு நிலம் கொடையளித்துள்ளார். இதனை,

*"ஆளுடையார்*
*இடக்கை நாயக*
*ஈஸ்வரமுடையாற்கு சிவபாதசேகரச் சதுர்வேதி*
*மங்கலத்து*
*ஸபையோம் அமுதுபடிப் பு*
*றாமாக விட்ட நிலம்"*[7]

என்ற கல்வெட்டுச் சான்றானது சுட்டிக்காட்டுகிறது.

**சபையார் அளிக்க வேண்டிய வரியை அளித்தல்**

மூன்றாம் விக்கிரமச் சோழனின் பதிமூன்றாவது ஆட்சியாண்டான கி.பி.1285 இல் தென்கரை நாட்டு பிரம்மதேய ஸ்ரீவீரசங்காதசதுர்வேதி மங்கலத்திலுள்ள திருவலஞ்சுழி மகாதேவருக்கு ஆண்டு ஒன்றுக்கு பிரம்மதேய சபை அளிக்கவேண்டிய இறை(வரி) ஒரு கழஞ்சும் அரசனுக்குரிய இருபத்தெட்டு கழஞ்சும் அரசனே கொடையாக அளித்துள்ளதை,

*"திருவலஞ்சுழி மஹாதேவருக்கு யாண்டு*
*ஒந்றுக்கு வைத்த*
*சுந்தனபுரம் நகரக்கற்துளை கழஞ்சு*
*இருபத்தெண்கழ*
*ஞ்சும் பிரம்மதேயத்துக்கு இவன் இறுக்கடவ*
*இறைப்பொருள் கழஞ்சும்*
*ஆண்டு வரையும்"*[8]

இவ்வரிகள் மூலம் அறியமுடிகின்றன.

**அரசர் சபையாருக்குக் கொடை வழங்க உத்திரவிடல்**

மூன்றாம் விக்கிரம சோழனின் இருபத்தெட்டாவது ஆட்சியாண்டான கி.பி.1303 இல் உலகுடையபிராட்டி சதுர்வேதிமங்கலத்து சபையார் விக்கிரமசோழ விண்ணகரப் பெருமாளின் திருப்போனத்துக்கு இருபத்துமூன்று அச்சுப் பொன்னினை கோயில் பண்டாரத்தில் அளித்தனர். மேலும், ஒரு பருவத்திற்கு இருபத்து முக்கல நெல்லினை இக்கோயிலுக்கு அளிக்க வேண்டுமென இவ்வூர் சபையாரிடம் அரசன் ஆணையிட்டுள்ளார் என்பதை,

*"ஸ்ரீபண்டார உடலிலே இத்திருபோநகம்*
*ஒந்றுக்கும்*
*பூவில் இரு*
*பத்து முக்கல நெல் அமுதுபடி சென்று*
*வருவதாகவும்"*[9]

இவ்வரிகள் மூலம் அறியமுடிகின்றன. இருபத்து மூன்று அச்சு பொன் என்பது அக்கால வழக்கப்படி பொன்னை எண்ணிக்கொடுக்கும் முறையாக இருந்திருக்கலாம். இருபத்து முக்கல நெல் என்பது ஒரு கலம் என்பது 3 தூணி. எனவே, முக்கலம் என்பது 9 தூணியைக் குறிக்கும். இருபத்து முக்கலம் என்பது 180 கல நெல்லைக் கொடுக்கும்படி அரசர் ஆணையிட்டுள்ளார். இவ்வாறு கூடுதலாகக் கொடை வழங்க அறிவுறுத்தியதற்கான குறிப்புகள் கல்வெட்டில் தெளிவுபடுத்தப்படவில்லை.

**முடிவுரை**

அக்காலகட்டம் மன்னர்களின் ஆட்சிக்காலமாக இருந்தபோதிலும் சபையார்கள் அரசருக்கு இணையாக அதிகாரம் பெற்றுள்ளனர். சபையார்கள், தண்ணீரப்பந்தல் அமைத்தல், மகா மண்டபம் அமைத்தல், திருநந்தா விளக்கு எரித்தல் போன்ற கோயில் சார்ந்த திருப்பணிகளையே பெரும்பாலும் செய்துள்ளனர்.

சபை கொடுக்க வேண்டிய சில வரிகளை அரசர்களே முன்வந்து கொடுத்துள்ளர். சில நேரங்களில் சபையார்களுக்கு அரசர்கள் சில பணிகளைச் செய்ய ஆணையிட்டுள்ளனர். இவற்றைக் காணும்பொழுது அரசர்களிடம் சபையார்கள் செல்வாக்கு பெற்றவர்களாகவே இருந்துள்ளனர்.

கொங்குநாட்டுக் கல்வெட்டுகளில் சபையார் பற்றிய குறிப்புகள் கி.பி.12 ஆம் நூற்றாண்டு காலகட்டத்திலேயே காணப்படுகின்றன. அவற்றிலும் சோழர் காலகட்டத்திலே அதிகமாகக் காணப்படுகின்றன.

**அடிக்குறிப்பு**

1. ஈரோடு மாவட்டக் கல்வெட்டுகள், தொகுதி – 3, ப.107
2. கோயம்புத்தூர் மாவட்டக் கல்வெட்டுகள், தொகுதி, 1, ப.192
3. ஈரோடு மாவட்டக் கல்வெட்டுகள், தொகுதி -2, ப.38
4. கோயம்புத்தூர் மாவட்டக் கல்வெட்டுகள், தொகுதி -1, ப.79
5. ஈரோடு மாவட்டக் கல்வெட்டுகள், தொகுதி -2, ப. 36
6. ஈரோடு மாவட்டக் கல்வெட்டுகள், தொகுதி -3, ப. 3
7. கோயம்புத்தூர் மாவட்டக் கல்வெட்டுகள், தொகுதி -1, ப.312
8. திருப்பூர் மாவட்டக் கல்வெட்டுகள் - ப.166
9. திருப்பூர் மாவட்டக் கல்வெட்டுகள் - ப. 228

**துணைநூற்பட்டியல்**


1. கோயம்புத்தூர் மாவட்டக் கல்வெட்டுகள் (தொகுதி,-1) முனைவர்.தி.ஸ்ரீ. ஸ்ரீதர் (ப.ஆ), தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை, சென்னை -08, முதற்பதிப்பு -2006.
2. திருப்பூர் மாவட்டக் கல்வெட்டுகள், முனைவர். தி. ஸ்ரீ. ஸ்ரீதர் (ப.ஆ), தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை, சென்னை -08, முதற்பதிப்பு - 2007.
3. ஈரோடு மாவட்டக் கல்வெட்டுகள் (தொகுதி -2), முனைவர்.தி.ஸ்ரீ. ஸ்ரீதர் (பொ.ப.ஆ), தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை, சென்னை -08, முதற்பதிப்பு -2010,
4. ஈரோடு மாவட்டக் கல்வெட்டுகள் (தொகுதி -3), முனைவர். தி. ஸ்ரீ. ஸ்ரீதர் (பொ.ப.ஆ), தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை, சென்னை -08, முதற்பதிப்பு -2010,